நுட்பக் கூறுகளை மீனளத் துறையிடமே தொடர்ந்து விட்டு வைப்பதும் விரும்பத்தக்கது எனக் கருதப்பட்டு, அந்த வகையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது திட்டம் இருப்பதாகக் கூறினார்கள். அதை உடனடியாக, ஏனென்றால் கோடை காலத்தில் வெளியூர்ப் பிரயாணிகள் அங்கே அதிகமாக வருவதால், அதன் மூலம் அந்நியச் செலாவணியும் அதிகமாகக் கிடைப்பதால், உடனடியாக ஏற்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதற்கென்று விரிவுபடுத்த, அழகுபடுத்த என்று திட்டம் வகுக்கப்பட்டு ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

M/s. Prynne Abbott and Davies, leading Architects அது சம்பந்தமாக ரிப்போர்ட் தந்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாயூரத்தில் அரிசன நலப் பணிகள்.

* 630 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972–73 இல் மாயூரம் தொகுதியில் அரிசன நலத் துறை மூலமாக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : *(அ) ரூ. 3,83,482.*

(இ) 1972–73 இல் மாயூரம் தொகுதியில் அரிசன நலத் துறை மூலமாகச் செலவழிக்கப்பட்ட தொகைபற்றிய விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

@ 654 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.